செ.வெ.எண்: 01 நாள்: 01.07.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.45.41 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (01.07.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், தாந்தானி ஊராட்சி, சிதம்பர விடுதியில் முதலமைச்சரின் சூரிய ஒளியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டிமுடிக்கப்பட்ட பசுமை வீடு கட்டடப்பணியினையும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வெட்டப்பட்ட திடக்கழிவு மேலாண்மை குழி பணியையும், தமிழ்நாடு ஊரக சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.29.75 இலட்சம் மதிப்பீட்டில் சிதம்பரம் விடுதி முதல் தாந்தானி சாலை வரை அமைக்கப்பட்ட தார்சாலைப்பணியையும், குரும்பூர் ஊராட்சி, கோவில்பட்டி திருக்குளத்தில் நடப்பட்டுள்ள மரக்கன்றுகள், பூவாத்தக்குடி ஊராட்சி, பூவாத்தக்குடியில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.13.56 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மரக்கன்றுகள் நட்டு வளர்த்தல் பணியினையும் என மொத்தம் ரூ.45.41இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப்பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் தாந்தானி ஊராட்சி, சிதம்பர விடுதியில் முதலமைச்சரின் சூரிய ஒளியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் கட்டிமுடிக்கப்பட்ட பசுமை வீடு கட்டுமான பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (01.07.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது குளங்களில் மரக்கன்றுகள் வளருவதற்கு இடையூராக இருக்கும் தேவையற்ற செடிகளை அகற்றவும், திடக்கழிவு குழிகளில் மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை தனித்தனியாக பிரித்து சேமிக்கவும், மரக்கன்றுகளை உரிய முறையில் நடவு செய்து பராமரித்து வளர்க்கவும், முடிவுற்ற பணிகளை உரிய முறையில் பராமரிக்கவும், மேலும் நடைபெறும் பணிகளை தரமான கட்டுமானப்பொருட்களை கொண்டு விரைவாக கட்டிமுடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வின் போது வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.பொய்யாமொழி, உதவிபொறியாளர் திரு.வேல்முருகன், ஒன்றியப்பணி மேற்பார்வையாளர்கள் திரு.குமாரசாமி, திரு.முத்துக்கிருஷ்ணன், திரு.தமிழ்மணி, உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**